**ஆக்கரபதன பிரதேச சபை - 2024**

**------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆக்கரபதன பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆக்கரபதன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு சபை பயன்படுத்துகின்ற முச்சக்கர வண்டி ஒன்றின் பெறுமதி ரூபா 800,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | அடுத்த ஆண்டின் போது கணக்கீடு செய்வதாக. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நூலக புத்தகங்களின் பெறுமதி ரூபா 498,729 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் போது கணக்கீடு செய்வதாக. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப் பட்ட 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றிற்குரிய அட்டவணைகளின் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 1,117,918 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | தாமதம் காரணமாக இத்தவறு இடம் பெற்றுள்ளது. எதிர்வரும் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகள் உரிய அட்டவணைகளுடன் ஒப்பிடப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **பாராளுமன்ற சட்டம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்** | | | |
| | 52 ஆம் பிரிவு | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் இனங் காணப்பட்டிருந்த 18 அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்துமீறிய நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக. | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| | நி.பி. 571(3) | 2018 ஆம் ஆண்டு முதல் 2022 வரையான காலப் பகுதிக்குரிய மொத்தம் ரூபா 2,305,238 காலாவதியான ஆன 40 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | விடுவிப்பதற்காக போதியளவு பணம் சபை நிதியத்தில் இல்லை என்பதால் நித்தியத்தினல் போதுமான அளவில் காணப்படும் சந்தர்ப்பங்களில் பகுதி பகுதியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | காலாவதியான வைப்புக்களை தீர்வு செய்தல் வேண்டும். |
| (இ) | **மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை** | | | |
| | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | வீதவரி அறவிடப்படும் ஆதனங்களின் மதிப்பீடு 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மதிப்பீட்டின் பின்னர் புதிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. | வீதவரி ஆதனங்களை மதிப்பீடு செய்வதகு விலை மதிப்பீட்டு திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதும் காலங் கடந்துள்ளதாக. | குறித்த காலப் பகுதியில் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொண்டு வீத வரி அறவிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 376,380 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,305,370 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,109,199 | 3,810,109 | 3,401,235 | 2,746,973 | 1,576,584 | 3,628,080 | 3,379,480 | 2,338,098 |
| (ii) | வாடகை | 1,654,960 | 1,493,279 | 1,737,500 | 731,260 | 2,545,800 | 2,000,606 | 1,295,500 | 975,481 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,805,500 | 2,211,085 | 2,211,085 | - | 2,830,000 | 1,694,500 | 1,694,500 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,277,000 | 3,728,461 | 3,450,702 | 4,683,776 | 64,739,712 | 4,135,820 | 2,897,847 | 2,328,221 |
| | | 11,846,659 | 11,242,934 | 10,800,522 | 8,162,009 | 71,692,096 | 11,459,006 | 9,267,326 | 5,641,800 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்த வருமானத்தில் பெற வேண்டிய வருமானம் ரூபா 5,641,800 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் ரூபா 8,162,009 ஆக இருந்ததால் 45 சதவீதமான அதிகரிப்பு ஒன்று எடுத்திருந்தது. அதன் பிரகாரம் வருமான சேகரிப்பின் செயலாற்றல் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது. | வருமான சேகரிப்பு நடவடிக்கைகளை உயர்மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு தேவையான எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 1,208,757 ஆன நிலுவை வீதவரி மீதியில் 1 ஆண்டிற்கு 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக 305 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா | வருமான பரிசோதக உத்தியோகத்தர் ஒருவர் இல்லாதமையால் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் | நிலுவை வருமானம் விரைவில் அறுவிடுவதற்கு மாற்று வேலை |

| | | |
|---|---|---|
| 417,693 தொகையும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 5 இற்கு இடைப்பட்ட 71 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 156,847 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 155 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 611,957 ஆன வீதவரி மீதியை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களை தடை செய்வதற்கு செய்யும் நடவடிக்கைகளுக்காக தொடர்பு படுவதற்கு முடியாமல் உள்ளதாக. | திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். |

**(இ) நீர் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 1,406,256 ஆன நிலுவையில் 01 ஆண்டிற்கு 03 இற்கும் இடைப்பட்ட காலமாக 52 அலகுகளில் இருந்து ரூபா 419,362 தொகையும் 3 இற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 05 அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 33,292 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக காணப்படும் நீர் வருமானத்தை சேகரித்தல் இடம்பெற்று வருவதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 241,427 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 3,054,200 ஆக இருந்தது. | முத்திரை கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பன வருமானத்தை பெற்றுக் கொள்வதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கெப் வண்டியொன்று 2020 செப்தம்பர் 05 ஆம் திகதி விபத்திற்கு உட்பட்டு ரூபா 3,567,160 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி பிரமாணம் 104(4) பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் முன்னால் தலைவரால் உரிய நட்டம் செலுத்தப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டு இருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் அப்பரிந்துரை செயற்படுத்தப்படா திருந்ததுடன் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | நட்டம் முன்னால் தலைவரால் தீர்வு செய்யப்பட வேண்டும் என்ற பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் அவரால் கொடுப்பனவு தவிர்ப்பு செய்யப்பட்டுள்ளதாக. | சட்ட நடைமுறைகளை பின்பற்றி நட்டத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய வருமான மற்றும் நிர்மாண கடன்பட்டோர் மீதி ரூபா 17,048,577 ஆக இருந்தது. அதில் 1 ஆண்டிற்கும் 03 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மொத்தம் ரூபா 1,565,000 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மொத்தம் ரூபா 150,000 மீதியாகவும் இருந்தது. | இவ்வாண்டில் உரிய நிர்மாண கடன்பட்டோர் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மாண மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் மீதி ரூபா 1,209,354 ஆக இருந்தது. அதில் 1 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக காணப்பட்ட மீதி ரூபா 57,481 ஆக இருந்தது. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு காணி ஏல விற்பனை மூலம் கிடைத்திருந்த 01 ஏக்கர் 03 ரூட் 0.83 பேர்ச் அளவிலான காணியொன்று 2008 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை 17 ஆண்டு காலமாகவும் 2018 மற்றும் 2021 இற்கு இடைப்பட்ட கால வீச்சில் கொள்வளவு செய்யப்பட்டிருந்த மொத்தம் ரூபா 626,633 ஆன இயந்திர உபகணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 03 ஆண்டுகள் முதல் 06 ஆண்டுகள் வரையான காலமாக விளைவற்றும் குறை பயன்பாட்டுக்கு உட்பட்டும் காணப்பட்டன. | காணி ஏல விற்பனை மூலம் கையளிக்கப்பட்டிருந்த காணித் துண்டை எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைக்கும் பயன்படுத்த முடியாதது என்பதாகவும் களஞ்சியத்தில் உள்ள உபகரணங்களை பயன்படுத்த போதுமான அலுவலக இட வசதிகள் இல்லை என்பதாகவும். | பொருத்தமான காணிகளை பொது நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் அனைத்து சொத்துக்களையும் பயன்படுத்த வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை வளவில் மொத்தம் ரூபா 10,747,869 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை. | இச்சொத்துகளை பதிவேடுகளுக்கு உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்கள் பதிவேடுகளில் உட்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போதும் 16 பதவிகளில் 78 வெற்றிடங்கள் காணப்பட்டன. | உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள 02 வருமானப் பரிசோதகர் பதவிகள், வேலை/களப் தொழிலாளர் மற்றும் 32 சுகாதார தொழிலாளர் மற்றும் நூலகர் பதவிகள் வருடக் கணக்காக வெற்றிடமாக இருத்தல் வருமான அறவீடு, ஒழுங்கை பராமரித்தல், மற்றும் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் என்பவற்றை முறைப்படுத்ததுல் மற்றம் சபையினால் நிறைவேற்றக்கூடிய மக்கள் சேவைகளை நிறைவேற்றுவதற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. | உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்களைப் பூர்த்தி செய்து பொது மக்கள் சேவைகளை செயற்திறனாக நிறைவேற்ற வேண்டும். |
| (இ) | 2022 மற்றும் 2024 காலப்பகுதியில் இடமாற்றம் பெற்றுச் சென்ற, இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 254,850 ஆன கடன் மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பகுதி பகுதியாக இந்த ஊழியர்களின் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை கடன் மீதிகள் அறவிடப்படப்படல் வேண்டும். |